# ஐயா **வெற்றிவேல்** அவர்களுக்கு...!

**என்பத்து ஒன்பதாம்** அகவை தன்னில் அடிவைக்கும்;
எங்கள் குல ஏந்தல் ஐயா பெருந்தகை **வெற்றிவேல்,**
தங்கமாய் நற்குணங்கள் தக்கவைத்த பண்பாளர்!
அங்கமாம் கோவை மண்ணின் **சுந்தரபுர** தாளாளர்!

வங்கக் கடலையில் வாழும் எங்களுக்கு, உவர்ப்பில்லா,
பொங்கும் **சிறுவாணி** புதுப் புனலாய் மடல் வார்க்கும்,
தங்கத் தமிழ் மகனார் தரனியிலே நிகரில்லா பெருமகனார்!
எங்கள் **நாவலர்** என்றே நாளும் உரை செய்வார்!

தங்கருத்தை நம்மீது திணிக்காத நெறியில், **பெரியாராய்;**
உங்கருத்தை நீ யறிவாய் எனும் சொல்லின் தீரர்!
மங்களமாய் வாழ்வின் நெறிகளுடன் தமிழும் செய்தார்!
எங்களின் உறவுமுறை செழித்திட **கொடிவழி உறவு** பூண்டு,

அங்கங்கு யாவரையும் அன்பாலே அணைத்திடும் மாமனிதர்!
இங்கவரும் அகவை என்பத்து ஒன்பதை பூர்த்தி செய்ய,
எங்கள் மனம் இனிதாய் இறையை வேண்டி வாழ்த்தும்!
தங்கமகன் தமிழ்போல் தழைந்து **நூறாண்டு** வாழ்தல்
வேண்டும்!
அன்புடன்,

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
*23-09-2022 (11.20 PM)*